# தென்னகம்

வார இதழ்

ஆசிரியர்: K.A. மதியழகன்


## ஏடு 26 அதுதான் காலக்குறி

வாழைக் கொல்லே, இந்த திருப் பெயரமைந்த ஊர் சிற்றூர் சிதம்பரத்திற்கு 15 மைல் வடக்கே வீராணத்து ஏரியின் மடையிலே அழகின் நர்த்தனத்திற்கிடையே காட்சி அளிக்கிறது. சென்ற வாரம் பொங்கலுக்கு மறுநாள் பொங்கல்விழாவில் கலந்துகொள்ள நானும் சிதம்பரத்து நண்பர்கள் வில்லாளன், வழக்கறிஞர் சாமிநாதன், சக்ரவர்த்தி, வேணு, பாலகுரு ஆகியோர் சென்ற கார் ஏரிக்கரையிலே விரைந்து கொண்டிருந்தது. ஊரின் எல்லே, தாரை தப்பட்டையுடன் மக்கள் வெள்ளம். எதிரே கண்ணுக் கெட்டிய தூரம் தண்ணீர் நிரம்பிய வீராணத்து ஏரியை ஒருமுறை பார்த்தேன். என்னுடைய நினைவு எங்கோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இழுத்துச் செல்லப்பட்டது. சோழ ராஜ்யத்தின் மகோன்னத நாட்கள், அநுராதபுரம் படையெடுப்பு — எண்ணுயிரம் ஈழத்தினர் சிறைப் பிடிப்பு— வீராணத்து ஏரியை வெட்டிய வியர்வைக்குளம். எண்ண அலைகளில் மிதந்தேன், இன்று சலனமற்று கண்ணுடி போல் காட்சியளிக்கும் இந்த வீராணத்து ஏரியில் வானத்தில் நட்சத்திரக்கூட்டத்திற்கு இடையே பவனி வரும் சந்திரன் போல் எத்தனை சோழகுல சுந்தரிகள், சேடிமார்கள் புடைசூழ பூம் படகில் விளையாடினார்களோ, எத்தனை அரச குமாரர்களுக்கு, மாவீரர்களுக்கு, அழகிகளுக்குவாழ்வு முரவால் தண்ணர் கல்லறையாகியதோ, எத்தனை வேந்தர்கள் தங்கள் பிறந்த நாள் விழாவை புலிக்கொடி யேந்திய தோணியில் மெல்லிய பூங்காற்று வீச, துடுப்புத் தள்ளி அகமகிழ்ந்து களித்தனரோ எனக் கற்பனையில் மூழ்கிக் கிடந்தேன். எனது கற்பனையைக் கலைத்து எங்கள் காதுக்கும், கருத்துக்கும் தேன் வார்த்த—செவிட்டாத அந்த பெரு முழக்கம், என்ன சொல்வேன்!

“அண்ணு வாழ்க! எங்கள் குலத் தலைவர் வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே!” ஏரியின் நடுவே ஒரு பெரும் படகு இருபது முப்பது இரு வண்ணக் கொடிகள். கொடிக்கு ஒரு வீரன். படகு நாங்கள் நின்றிருந்த கரைக்கு வந்து கொண்டிருந்தது. எதிர்க்கரையிலே உள்ள வட்டத்தூர் எனும் கிராமத்து வாலிபர்கள் வாழைக்கொல்லே விழாவில் கலந்துகொள்ள வந்து கொண்டிருந்தனர். அவர்கள் எழுப்பிய ஒலியை காற்று எட்டுத திக்கும் எதிரொலித்தது இலட்சியக் கரையை எட்டிய நினைவுடன் கரை யேறினர். ஊர் முழுதும் மரகதப் பந்தல் வேய்ந்தது போன்றுமனேகரமாய் ஏற்பாடுகள் செய்திருந்தனர். நான் கண்ட வாழைக்கொல்லே போன்று ஆயிரம் வாழைக்கொல்லேகள் பொங்கல் நாளில் தமிழகத்தில் சென்ற வாரம் அமைந்தது புதுநிகழ்ச்சி. எழுச்சிக்கு வித்தூட்டியகாட்சிகள். வருங் காலம் நமக்கு வழங்க இருக்கும் வலிவினையும் பொலிவினையும் உலகுக்குப் பிரகடனப் படுத்திய மாட்சிகள்!

K.A. மதியழகன்

சென்னையில் நடைபெற்ற பொங்கல் விழா அணி வகுப்பில் இலட்சம்பேர் திரண்டனர். விளையாட்டுப் போட்டி, நாட்டிய அரங்கம், செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்ற விழாவில் பொதுச் செயலாளரும், துணைப் பொதுச் செயலாளரும், ராஜேந்திரனும், நாராயணசாமியும் சொற் பெருக்காற்றினர்.

விழுப்புரம் ரயில்வே சங்கத்திலும் திருவள்ளூர் விழாவிலும் அறிஞர் அண்ணு அவர்களின் கருத்து மழை.

சேலத்தில் சம்பத்!

சிதம்பரத்தில் சி. பி. சிற்றரசு, இளங்கோ.

மதுரையில் அன்பழகன்.

திருநெல்வேலியில் கல்யாணசுந்தரம்.

திருப்பூரில் மனோகரன்.

கடலூரில் இளம்வழுதி முயற்சியில் ஏழுநாள் விழா அந்த விழாவில் முத்து, கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து முதலானோர்.

கரூரில் வி. பி. இராமன்.

காஞ்சியில் கண்ணதாசனும், நானும் கலந்து கொண்டோம்.

கஸ்தூரியின் இசைநிகழ்ச்சியில் துவங்கி ‘கனவில் கண்ட கட்டபொம்மன்’ நாடகம்வரை இத்திக்கும் முத்தமிழும் முழங்கியது.

சென்னையில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட கிளைகளில் நிகழ்ச்சிகள். புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற விழாவில் அண்ணுவும், கலைஞர்களும் பங்கு கொண்டனர். எவர் கரத்திலும் ஏதோ ஓர் வாழ்த்திதழ், எவர் கருத்திலும் ஓர் பூரிப்பு, இந்த கட்சிக்குத்தான் சொந்தம் என்றில்லாமல்எவரும் உரிமை பாராட்டிய பெருவிழா. இந்த பொங்கல் நாள் ஓர் புதிய திருப்பம் என்பேன்.

முன்பெல்லாம் கிருஸ்துமஸ் காலங்களில் மட்டுமே வாழ்த்துக்கள் குவியும். இந்த பொங்கலில் வண்ணமும் எண்ணமும் குழைத்த வாழ்த்திதழ் குவியல்களினல் ஆயிரம் தபால் மூட்டைகள் சென்னையிலே மட்டும் தாமதப்படுத்தி அனுப்ப வேண்டி வந்தது என்று அஞ்சல் நிலைய அலுவலாளர்கள் கூறினர்.

பொங்கலன்று தமிழகத்திற்கு பல்வேறு ஏடுகள் வழங்கிய மலர்கள் பூத்துவரும் சமுதாயத்திற்கு முன்னறிவிப்பு போல் விளங்கின.

அருமை நண்பர் கலைஞர் கருணாநிதி அளித்த ‘முரசொலி’ பொங்கல் மலர், ஏற்கெனவே பாரம் தாங்காத அவரது வெற்றிப் பாகையில் மேலும் ஓர் வண்ணச் சிறகு என்று சொல்லலாம்.

திராவிட நாடு, தென்றல், திராவிடன், அன்னை, மக்களாட்சி, தென்றல் திரை, கலைப் பூங்கா ஆகியவை தந்த வண்ணமும் எண்ணமும் குழைத்த கருத்து வட்டில்கள் ஆரம்பமாகியுள்ள மறுமலர்ச்சித் தலைமுறையை அவனிக்கு தெரிவிப்பனவாய் ஒளிவீசின. கழனி, கலப்பை, உழவு, உழைப்பின் உயர்வு என்றிருந்தசமுதாயம் கைலாயம், காகுத்தன் மனைவி, கமண்டலம், பர்ணசாலை என்பவைகளிலே மாட்டிக் கொண்டது. இன்று மீண்டும் விடுதலை. நம் உள்ளம் புளகாங்கிதத்தால் விம்முகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் சந்தர்ப்பத்தில் நமது அண்ணு அவர்கள் ‘கிரஹாம் விதி’ தெரியுமா?

(2-ம் பக்கம் பார்க்க)

வெள்ளி 23-1-’59

## ஜன. 26 அதுதான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீ பொருளாதாரம் படித்த மாணவன் தானே!" என்றார்கள். "தெரியும்" என்றேன். விடுவதாயில்லை. யோசித்துக்கொண்டேன். கள்ள நாணயங்கள் நல்ல நாணயங்களை விரட்டுகின்றன. அதுதான் 'கிரஹாம் விதி' என்றேன்! நல்ல நாணயங்கள் செலாவணியில் இருக்கும்போது கள்ள நாணயங்கள் புகுந்தால், நல்ல நாணயங்கள் புழக்கத்திலிருந்து குறையும். அவை வரும் பதுக்கி வைத்துக்கொள்வர். ஒரு கட்டத்தில் எங்கும் கள்ளநாணயங்களே சுற்றிவரும். நல்ல நாணயங்கள் மறைந்துவிடும். இந்த பொருளாதார விதி, பொங்கல் விழாவிற்கும் பொருத்தமுடையது என்பது என் கருத்து. ஆனி மஞ்சனம், ஆடிப்பதினெட்டு ஆவணிஅவிட்டம், புரட்டாசி விரதம், ஐப்பசி தீபாவளி, கார்த்திகை தீபம், மார்கழி பஜனை, மாசி மகம், பங்குனி உத்திரம், என்ற கெட்ட நாணயங்களின் புழக்கம் அதிகரித்தது. திராவிடரின் பண்பாடு செலாவணியிலிருந்து ஓய்ந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா அவர்கள் காஞ்சிக்கு அருகேயுள்ள திருவத்திபுரத்தில் தமிழரின் பெருவிழாவை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தும் விருப்பத்தில் ஒரு முயற்சியைத் துவக்கினார். அது நல்ல பலனை அளித்திருக்கிறதுஎன்பதை நாலு திக்கிலிருந்தும் வரும் சேதிகள் உரைக்கின்றன.

நம்மை என்றென்றும் அடிமைப் படுகுழியில் வைத்திருக்க எண்ணும் டில்லி ஆதினத்தின் கோட்டையிலிருந்து நமது உரிமைப் பொருள் ஒன்றினை பெற்றிருக்கிறோம்.

இது நாள் வரையிலும் நமது சாதாரண சிறிய உணர்வுகளைக் கூட உதாசீனப்படுத்துவதையே நிலாச் சோறு எனக் கருதும் டில்லி தர்பார், நமது உணர்வில் ஒன்றை மதிக்கத் தொடங்கியுள்ளது.

தந்தி இலாகாவில் திருமண வாழ்த்து, கிருஸ்துமஸ் வாழ்த்து போன்றவைகளுக்கு சில குறியெண்கள் உண்டு. எட்டு என்றால் "மணமக்கள் நீடுழிவாழ்க" என்று குறைந்த செலவில் தந்தி கொடுக்க முடியும். இப்படி தந்தி இலாகாவில் இதுவரை 25 குறியெண்கள் இருந்தன. ஆங்கிலத்தில் இதனை கோடு என்பார்கள். தை முதல் நாள்-முதல், குறியெண் 26-ஐ சேர்த்துள்ளனர். ஜ. 26 என்று தந்தி கொடுத்தால் இனிமேல் குறைந்த கட்டணத்தில் "உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்" என்று தந்தி சேரும். எத்தனையோ வேண்டுகோள்களுக்கு – விண்ணப்பங்களுக்கு இணங்காத ஆதிக்க வெறி, நமது உணர்வுக்கு வழிவிட்டிருக்கிறது ஜ. 26. அதுதான் காலக்குறி என்கிறேன்.

# வேலைக்கார அழகி!

மறைமுதல்வன் எம்.ஏ.பி.எஸ்

பிலாசியா என்பது அழகும் இளமையும் மிக்க ஒரு பெண்ணுக்கு இருக்கக்கூடிய பெயரல்ல! ஆனாலும் அவள் பெயர் அதுதான். கரை தாண்டி வழியும் புது வெள்ளம்போல வாலிபமுள்ள ஒருத்தி 'ஆயா' வேலை பார்ப்பதில்லை! ஆனாலும் அவள் 'ஆயா'வாகத் தான் வேலை பார்த்து வந்தாள்.

பிரிஜ் பூஷன் சிங் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி வீட்டில் 'ஆயா'வாக வேலை பார்த்து வந்தாள் பிலாசியா என்ற 22 வயதுள்ள அந்த மங்கை!

அவள் அழகு நின்று நிதானமாக எரியும் குத்து விளக்கின் சுடர்போன்ற அழகல்ல; 'பளிச்' சென்று கண்ணைப் பறிக்கும் மின்னல் அழகு! கைகூப்பி வணங்கக்கூடிய அழகல்ல – வெறி கொள்ளச்செய்யும் அழகு! அதனால் பலர் அவளைக் கண்டு பெருமூச்சு விட்டதிலும், கேலி பேசியதிலும், உறவு கொள்ள முயற்சித்ததிலும் வியப்பில்லை.

பிலாசியா தனது அழகை வெறும் அழகாக மட்டும் கருதவில்லை. அந்த அழகால் வேறு சில வசதிகளையும் சுலபமாக சாதிக்கமுடியும்என்று நம்பினாள். ஒழுக்கம் என்பது அவளுக்கு சம்பந்தப்படாத ஒருவிஷயம்போலத் தோன்றியது! அவள் பல நேரங்களில் பல வேறுபட்ட மனிதர்களோடு பல இடங்களில் காணப்பட்டாள்! இது பற்றிய புகார்கள் அவள் எஜமானரான ஐ. சி. எஸ். அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டன.

1943-ம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதி பிலாசியாவை திடீரென்று காணவில்லை! அவள் என்ன ஆனாள்? எங்குபோனாள்? எவருக்கும் தெரியவில்லை! உயிரோடு இருக்கிறாளா? அதுவும் தெரியாது. ஆனால் வதந்திகள் வாய்மூடி இருக்கவில்லை. தெளிவில்லாத, உருவற்ற வதந்திகள் உலவின. எல்லா வதந்திகளும் ஒரு நபரைச் சுட்டிக்காட்ட தவறவில்லை – பிலாசியாவின் மறைவுக்கும் அவள் எஜமானரான சிங்குக்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும் என்று ஊர் பேசியது!

அப்போதைய ஐக்கிய மாகாணத்தில் அரசாங்க காரியதரிசியாக இருந்த மூடேக்கு வதந்திகள் எட்டின. உடனே போலீஸ் துப்பு விசாரணை துவங்கிற்று. சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டன. கடைசியில் சிங்கும், வேறு நால்வரும் கைது செய்யப்பட்டனர். டில்லியிலும் லக்னோவிலுமுள்ள அதிகாரிகள் வட்டாரத்தில் இச்செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது!

லக்னோவிலுள்ள வழக்கு மன்றத்தில் கூட்டம் தாங்கவில்லை. சிங் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டபோது 'என்ன நடக்கப் போகிறது' என்ற கேள்வி ஒவ்வொருவர் பார்வையிலும் தென்பட்டது. எதனாலாவது வழக்கு நடைபெறாதிருந்துவிடுமோ என்றஐயம் சிலர் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. ஆனால் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. நீதிபதி வந்தமர்ந்தார். ஜூரர்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். குற்றவாளிகளுக்கு அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் வாசித்துக் காண்பிக்கப்பட்டன!

பிலாசியா என்ற பணிப் பெண்ணை கொலை செய்ததாகவும், அக் கொலையைக் கண்டுபிடிப்பதற்கான சாட்சியங்களை மறைத்ததாகவும் சட்டம் குற்றங்களை அடுக்கிக் காட்டியது!

சிங்கின் மீது சுமத்தப்பட்ட குற்றத்தின் தன்மையோ அதன் விபரமோ பொது மக்களுக்கு தெரியாமல் ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால், நீதி மன்றத்தில் குற்றச்சாட்டு படிக்கப்பட்டபோது, கூடி இருந்தவர்களிடையே ஆரவாரம் கிளம்பியது. நீதி மன்றச் சேகவன் 'அமைதி! அமைதி!' என்று கத்தினான்!

வழக்கு நடைபெற்ற எல்லா நாட்களிலும் பல உயர்தர அதிகாரிகள் வந்திருந்து கவனித்தனர். இடத்தை விட்டு எழுந்தால் பிறகு கிடைக்காதோ என்று ஒருவராவது ஆரம்பம் முதல் முடிவுவரை நகரவில்லை!


அரசாங்க வழக்கறிஞர், குற்றம் நடந்த விதத்தை கதைபோல விரிவாக எடுத்துரைத்தார் :-

கோடை நாட்களில் ஒரு நாள் 1943-ம் ஆண்டு மே மாதம் 26-ம்தேதி இரவு 7-30மணிக்கு சிங் வீட்டுக்கு திரும்பி வந்தார். வீட்டில் நிலைமை மோசமாக இருந்தது. பிலாசியாவின் நடத்

(6-ம் பக்கம் பார்க்க)

## பிள்ளையோ பிள்ளை !





" தென்னகம் "

மலர் 1 ] [ இதழ் 2

# அபயங்கர் நகர் திருவிழா !

நாகபுரியில் நடைபெற்ற 64-வது காங்கிரஸ் மாநாடு ஒருவாறு முடிந்தது - தலைவர்கள் ஊர் திரும்பி விட்டனர். இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பின் கூடிய காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற அதே நாகபுரி, பொது மக்களின் கவனத்தை கவராததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. வழக்கமாகக் கூடிக் கலையும் திருவிழாவாகவே முடிந்திருக்கிறது. எந்த மாநாட்டிலும் இவ்வளவு குறைவாக மக்கள் கலந்து கொள்ளவில்லை என்றும், உற்சாகமோ, ஆர்வமோ எவரும் காட்டவில்லை என்பதையும் ஆதரவு ஏடுகளே தீட்டியுள்ளன.

இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவும், நாற்பத்தையாயிரம் ரூபாய் மதிப்பில் நுழைவுவாயிலும் செய்து அமைக்கப்பட்ட திருவிழாவில் சிக்கனம் குறித்தும் விரையக் குறைப்பு பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளனரே என்று நாம் யாரும் ஆபாசமோ, ஆச்சரியமோ படத் தேவையில்லாத அளவிற்கு, வேறு ஆச்சரியமான நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

மற்றவர்களை சினிமாக் கட்சி என்று மேடை தவறாது வாய் கிழியப் பேசும் இந்த மாநிலக் காங்கிரஸ் தலைவர்கள், பம்பாய் சினிமா நட்சத்திரங்கள் நடத்திய கலை நிகழ்ச்சியில் ஏற்பட்ட அமளி குறித்தும், பிரதமர் நேருவே போலீஸ்காரர்களுடன் அமைதியை ஏற்படுத்த முயன்றும், மூன்று முறை தடியடிப் பிரயோகம் செய்தும், நள்ளிரவுவரை அமைதி நிலவாத நிலை குறித்தும், நான்கு வயதுக் குழந்தை, ஒரு போலீஸ் அதிகாரி உட்பட அறுபது பேர் படுகாய முற்றது குறித்தும், கல்லெறி துழைந்தது குறித்தும் மனதிற்குள்ளே வெட்கப்பட்டுக்கொண்டிருக்கக்கூடும். அது பற்றிக்கூட நாம் கவலைப்படவில்லை.

அபயங்கர் மாநாடு குறித்து ஒரு வாக்கியத்தில் சொல்ல வேண்டுமானால், பம்பாய் பத்திரிகை ஒன்று குறிப்பிடுவது போல் "அறுபது நிமிட சொற்பொழிவை நேரு முடித்தவுடன் பலத்த கரகோஷம் எழுந்தது" என்பதுடன் முடித்து விடலாம். நேருவுக்கு காங்கிரஸ் உறுப்பினர்களிடம் இருக்கும் மிகப் பெரிய செல்வாக்கையும், அவர் நீங்கினால் காங்கிரசுக்கு சம்பவிக்க இருக்கும் பேராபத்தையும் அபயங்கர் நகர் மாநாடு நன்கு படம் பிடித்துக் காட்டியது என்பதை தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறோம்.

நாகபுரியில் காங்கிரஸ் தீர்மானித்திருக்கும் விவசாய சம்பந்தமான தீர்மானம் எந்த மாறுதலையும் செய்து விடப் போவதில்லை என்பதை அங்கு நிலவிய கருத்து வேற்றுமை நன்கு எடுத்துக் காட்டியது.

" உழுபவனுக்கே நிலம் சொந்தம் " என்ற சுலோகத்தை காங்கிரஸ் இருபது வருடங்களாகத்தான் உச்சரித்து வருகிறது. நேருவின் தலைமையில் சுபாஷ் சந்திரபோஸ் திட்டக் கமிஷன் அமைத்த நாளிலிருந்துதான் காங்கிரஸ் ஜமீன்தார் முறையை ஒழிக்க வேண்டும், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்ற வாக்குறுதியை மக்களிடம் திரும்பத் திரும்பச் சொல்லி வந்துள்ளது, எனினும் நாடாளும் வாய்ப்புப் பெற்ற காங்கிரஸ் இந்த பனிரெண்டு ஆண்டுகளில் எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

இந்தத்தீர்மானங்களை அமுல் நடத்தும் காங்கிரஸ், ஆள வந்தவர்கள் இந்தக் கொள்கைகளை ஒத்துக்கொண்டது தங்கள் தலைவர்களின் மீதுள்ள பக்தியாலேயே தவிர கொள்கையின் மீதுள்ள பற்றினாலல்ல-இவைகள் ஏன் அமுல் நடத்தப்படவில்லை என்று எவரும் வற்புறுத்தியதில்லை. இன்றைய தீர்மானமும் செயலளவில், ஆவடி சோஷலிச தீர்மானத்தின் கதியைப்பெறுமென்றே நினைக்கிறோம். காரணம்? மூன்றும்அம்சங்களைக் கூர்ந்து கவனித்தால் நமது அச்சத்திற்குரிய நியாயம் தெளிவாகிவிடும்.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் உணவு உற்பத்தியை இரட்டிப்பது இதன் முக்கிய நோக்கமென்றும், அதற்கு இன்றுள்ள நிர்வாக இயந்திரத்தைக் கருவியாக உபயோகிக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

ஒரு ஆண்டு சட்டங்கள் இயற்றுவதற்கும், மூன்று ஆண்டுகள் கூட்டுறவு பண்ணைகள் நிறுவுவதற்கும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு கடித மெழுதினாலே பதில் போடுவதற்கு நாலு மாத கால தாமதமாகும் இந்த நிர்வாக இயந்திரத்தைக் கொண்டு-புள்ளி விபரம் எடுத்து, மீதியுள்ள மூன்றாண்டுகளில் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்பதை காலம்தான் காட்ட வேண்டும்.

நேருவுக்காகத்தான் கை தூக்கினார்கள் காங்கிரஸ்காரர்கள். தங்கள் இதயப் பூர்வமான ஆதரவை அளிக்கவில்லை என்பதை-உத்தர பிரதேச ரெவின்யூ மந்திரி சரன்சிங் அவர்கள் எதிர்ப்புக்குக் காட்டிய அமோக வரவேற்பு விளக்கியது.

காங்கிரஸ் எத்தகைய முதலாளிகளின் கூடம் என்பதை அபயங்கர் மாநாடு குறித்து சார்புடைய பத்திரிகைகள் தீட்டிய தலையங்கங்களைப் பிறிதோர் இடத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

காங்கிரஸ்-மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவில்லை என்பதை-மறைக்க முயலுகிறார்கள் என்பதை கொழுந்து விட்டெரியும் மராட்டிய தனி மாநில கோரிக்கை குறித்து ஒரு வார்த்தையும் கூறாமல் இருந்ததிலிருந்து காட்டிக் கொண்டார்கள்.

ஆனால் மக்கள் மனதில் எழுச்சி மிக்க நியாயமான கோரிக்கைகளுக்கு என்ன பேராதரவு உள்ளது என்பதை அபயங்கர் மாநாடு ஆரம்பமான அதே நாளில் சம்யுக்த மராட்டிய சமிதி நடத்திக் காட்டிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் மூலம் நிரூபித்துக் காட்டினார்கள்.

மாநாட்டிற்குப்போட்டியாக நடைபெற்ற மாபெரும் அணிவகுப்பை ஒரு பிரபல ஆங்கில பத்திரிகை, தென்னகத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் பொதுக் கூட்டங்களை நினைவு படுத்தியது" என்று வர்ணனை தீட்டியது.

வெளியே தெரியாவிட்டாலும், கோவிந்த வல்லபபந்த் அவர்களின் தலைமையிலுள்ள உத்தரப் பிரதேசத்தாருக்கும் மொரார்ஜி தலைமையிலுள்ள பம்பாய்க்காரர்களுக்கும் இடையே உள்ள தலைமைப் போட்டி கனன்று கொண்டிருந்தது என்பதை கூர்ந்து கவனிப்பவர்கள் அபயங்கர் நகர் திருவிழாக் கூத்திலிருந்து புரிந்து கொண்டுள்ளனர்.

தேபரின் ராஜினாமாவிற்குக் காரணம்? பம்பாய்-உத்திரப் பிரதேச தலைமைப் போட்டி என்று கூறப்படுவதற்கும், தென்

(7-ம் பக்கம் பார்க்க)

# அண்ணாவுடன் 1354 மைல்கள்

நாடெங்கும் மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது. மக்கள், இசையிலும், கலையிலும், ஆடல் பாடலிலும் லயித்திருந்தனர். நாட்டிய வல்லுநரும், சிற்பக் கலைஞரும், சித்திரம் தீட்டுவோரும், தங்கள் எண்ணங்களைச் செயலாக்கி, மக்களின் மாமன்றத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக்கொண்டிருந்தனர். நாடாண்ட மாமன்னனோ, பொன்னையும் மணியையும் வாரி வழங்கிய வண்ணம் இருந்தான். நாடெங்கிலும் வலிமை மிகுந்திருந்தது போலவே, நாட்டின்நகர்ப்புறமெங்கும்அழகு நடை போட்டுக்கொண்டிருந்தது கோட்டைக் கொத்தளங்களில் எல்லாம் சிற்பக்கலைஞரும், ஓவியரும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டியிருந்தனர். யாழும், குழலும் தனது இனிய ஓசையை நகரெங்கும் பரப்பிக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட மகிழ்ச்சி பொங்கிய நகராகத்தான் வடநாட்டை ஆண்ட மாமன்னன் ஷாஜஹான் தனது தலைநகரான டெல்லிப் பட்டணத்தை வைத்திருந்திருக்கக்கூடும் என்ற எண்ணம்தான் எனக்கு டெல்லியின் செங்கோட்டையைக் காணும் போது ஏற்பட்டது. பெரிய அகழி, அதை அடுத்துமாபெரும் மதிற் சுவர், சுவரை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள், உள்ளே உத்தியான வனம், அழகைத் தெளித்து கிடப்பதுபோல் நீர்ப்பாதைகள் அதன் இருமருங்கும் பச்சைப் பசேரென்ற செடிகள். அதையடுத்து மொகலாய கலாச்சாரத்தை தெள்ளெனக்காட்டும் கட்பீடம், ஆகவே தர்பார் மண்டபம் முதல் அந்தப்புரம்வரை அடுக்குகள் இத்தனையும் பார்த்துக்கொண்டே வந்த நான் ஓரிடத்தில் அசந்துபோய் நின்றேன். வண்ணத்தை வாரி வழங்கி பளிங்காலேயே கட்டப்பட்டு, சித்திர வேலைப்பாடுகளால் மேலும் மெருகூட்டப்பட்டுக் கிடந்த அந்த மண்டபத்தில் சில உருது மொழியில் எழுதப்பட்ட வாசகங்கள் காணப்பட்டன. 'பூலோகத்தில் சுவர்க்கம் என்று ஒன்று இருக்குமேயானால் அது இதுதான்! 'அது இதுதான்!' என்று கூறியது அவ் வாசகங்கள்.

எழுநூறு ஆண்டுகட்கு முன்பு ஆண்ட மன்னன் கட்டிய அதே போன்று இன்று எந்தக் கட்டிடம் உள்ளது என்றுஎண்ணியவாறே நடந்தேன். இந்த வாசகங்களை எந்தக் கட்டிடத்தின்மீது எழுதலாம் என்பதாய் என் எண்ணம் சென்றது. டெல்லியில் எங்கு பார்த்தாலும் ஒரே கட்டிட மயம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பார்த்ததற்கு இன்று எத்தனையோ மாறுதல்கள். பல முக்கிராக்களையல்லவா டெல்லி உற்பத்தி செய்கின்றது. ஆகவே ஏராளமான புதுத் தோற்றங்கள் அங்கே மங்கிக் கிடக்கின்றது. டெல்லி செங்கோட்டையில் கிளம்பி ஆறு மைல் கடந்ததும் ஒரு வானளாவிய கட்டிடத்தைக் கண்டேன். முன்பு நான் இதைக் கண்டதில்லை. சமீபத்தில் உருவாக்கப்பட்டது இது, இந்த எழில் மாடம் எந்த நாட்டுக்காரருடையது? என்றேன். நண்பர் சம்பத் அவர்கள் இதுதான் "அசோகா" ஓட்டல் என்றார்கள் நான் அயர்ந்தே போனேன் டெல்லி செங்கோட்டையில் நான் கண்ட அதே வாசகங்களை டெல்லியின் எந்தப் பகுதியிலாவது எழுத வேண்டும் என்றால், அது இந்த 'அசோகா ஓட்டலின் விருந்து மண்டபத்தின் முன்புதான் எழுதப்பட வேண்டும்! தற்போது உள்ள பூலோகத்தில் சுவர்க்கம் என்று ஒன்று இருக்குமேயானால் அது இது தான்! அது இது தான்! என்று எழுதி

**க. இராசாராம், பி.ஏ.**

விடலாம். விருந்து மண்டபம் ஏராளமான செலவில் கட்டப்பட்டுள்ளது. இசையை வாரி வழங்கிய வண்ணம் உட்புறங்கள் குளுகுளுச் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. அதற்கும் செங்கோட்டைக்கும் வித்தியாசம், அது மன்னர்கள்காலத்தில் கட்டப்பட்டது. இது மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகள் ஆளும் ஜனநாயகக் காலத்தில் கட்டப்பட்டது. செங்கோட்டையிலும், வறுமை இருந்திருக்காது. இதன் உள்ளேயும் வறியவர்கள் போக முடியாது.

அன்று செங்கோட்டை, இளவரசர்களையும், மந்திரிகளையும், வெளிநாட்டுத் தூதுவர்களையும் தன்னிடத்தே தங்க வைத்து விருந்தூட்டி மகிழ்ந்தது. இன்று அசோகா ஓட்டல் எம். பி.க்களையும், வறுமையறியாத வணிகர்களையும், வெளிநாட்டுக்காரரையும், வரவேற்று உபசரிக்கின்றது.

'இந்தியன் வருமானமோ இரண்டறை அணுவே தான்' என்று அருமை காங்கிரஸ் நண்பர்கள் பாடக் கேட்டிருக்கிறேன் அந்த இந்தியன் இன்று 'அசோகா ஓட்டலில் நுழைய முடியாது. ஷாஜஹான் காலத்து மக்கள் எப்படி டெல்லி செங்கோட்டையின் இன்பத்தைக் கண்டோ, அநுபவித்தோ இருக்க முடியாதோ அதேபோல் இன்று 'கலிகால பாரத சுதந்திர யுத்தத்தில்' பங்கு கொண்ட இந்த பரிதாபத்திற்குரிய இந்தியர்கள் அதில் நுழைந்திருக்க முடியாது. ஏழ்மையின் கொடுமை, அந்நியர் சுரண்டல், அடிமைத்தனம் இந்த வாசகங்களைக் கொண்டே மக்களைத் தன்னுள் ஈர்த்த காங்கிரசின் மூலவர்கள் இன்று மன்னர்களும் கண்டு மருண்டோடத் தக்க அளவு கேளிக்கைகளில், பணத்தை வாரி யிறைத்த வண்ணமுள்ளனர். வார்த்தையளவிலே 'சபர்மதி' ஆசிரமத்தை அமைத்து அதில் அரையாடை உடுத்தி எளிய வாழ்வை அமைத்து நடத்திய காந்தியாரின் பாதையில் நடந்ததிருக்கூட்டம் இன்று கோலேந்திகளாக மாறினதும், வாழ்வின் உச்சக் கட்டத்தை அனுபவித்தே தீருவது எனக் கங்கணம் கட்டி விட்டதுபோல் தோன்றுகின்றது. தாங்கள் அனுபவிக்க வேண்டும் என்பதையெல்லாம் இன்றைய ஆளவந்தார்கள் 'டெல்லியிலே' தேக்கி வைத்துள்ளார்கள். 'மதுவிலக்கு' இங்கே பழகிப்போன சொல்! 'மதுவிலக்கு' அது மடையர்களின் செயல் என்று எடுத்துக் காட்டுவதுபோல், மது நிரம்பி வழிய ஏற்பாடு, 'படாடோபம் அற்று எளிய வாழ்வு வாழுங்கள்' இங்குள்ளாருக்கு உபதேசம். 'படாடோபம்' இல்லாத நாளே அங்கேயில்லாத மாதிரி ஏற்பாடு தினம், தினம் புதுப்புது முகங்கள், அவர்கட்கு விருந்துகள், வான வேடிக்கைகள், குதிரைப் படையின் அணிவகுப்பு, திறந்த காரில் ஊர்வலம், மாலை ராஷ்ட்டிரபதியுடன் விருந்து, பார்லிமெண்டு அங்கத்தினர்களின் கோலாகலம், பார்வையாளர்களின் பரவசம், மந்திரிகளின் இன்ப உபசரிப்புகள், இதுதான் டெல்லி. உலக நாடுகளிடம் எந்தச் சாதனையைக்காட்டிப் பணம் பெறலாம் என்பதற்காக சிந்திப்பதும், எவ்வளவு கடன் கொடுத்தால் அகிலஇந்தியாவை தன் ஆதிக்கத்தில் கொண்டு வரலாம், எனச் சிந்திக்கும் வெளிநாட்டுக்காரரும் உலவும் பூமியாக இன்று விளங்குகின்றது.

ஆதாரங்களைத் தன்னிடத்திலே கொட்டிக்கிடப்பதை எடுத்துக்காட்டுவதற்காகக் கட்டப்பட்டுக்கொண்டுவரும் மாளிகைகள் ஏராளம். எங்கு பார்த்தாலும் அலுவலகங்கள். ஏராளமான பணத்தை மாதச் சம்பளமாகப் பெறும் அதிகாரிகள். அந்த அதிகாரிகளிடம் பழகி பர்மிட் பெறத் தகுதி வாய்ந்த கம்பெனி அதிகாரிகள், புத்தம் புதுக்கார்களின் பேரொலி. இத்தனையும் உண்டு டெல்லியில்.

(8-ம் பக்கம் பார்க்க)

# தென்னகம் பற்றி வெளிநாட்டுத் தூதர்கள்!

★

## கௌண்ட் லிண்டன் (பெல்ஜியம் தூதர்)

"சாந்தினி சௌக் ஜன நெருக்கடியில், சின்னுட்களுக்கு முன் என் காரில் அமர்ந்திருந்தேன். என்னுடைய காரின் நிறம் பளிச்சென்று இல்லை. மங்கலான நீல நிறமுடைய பெரிய கார். சிவப்பு நிற 'நெம்பர் பலகை' இருக்கிறது. அதில் "பெல்ஜியம்" என்று எழுதப்பட்டுள்ளது. கொஞ்ச நேரத்திற்குள் ஒரு பெரிய கூட்டம் சூழ்ந்து கொண்டது. கூட்டத்தில் ஒருவர் சொன்னது என் காதில் விழுந்தது. "பெல்ஜியம்? அது தென்னகத்திலுள்ள சுதேச சமஸ்தானங்களில் ஒன்றாக இருக்கும்! சண்ட்னி சௌக் ஆசாமி கூறியது முழுவதுமே தவறல்ல. பெல்ஜியத்தின் பரப்பும், திருவிதாங்கூர் ராஜ்யத்தின் பரப்பும் ஒன்றுதான்!

## அப்துல் காதர் (இந்தோனேசியா தூதர்)

"என்னுடைய இந்திய நண்பர்களுக்கு, குறிப்பாக தென்னகத்து நண்பர்களுக்கு, ஒன்று கூறுவேன், என்னுடைய நாட்டிற்குச் சென்றால் தாங்கள் தென்னகத்தில் இருப்பதாகவே உணர்வார்கள். இதனை உறு[illegible]டுச் சொல்லமுடியும். மரகதக் கம்பளம் போன்ற பச்சைப் பசுமை, ஓங்கி வளர்ந்த தென்னை மரங்கள், கனிகுலுங்கும் தோட்டங்கள் ஆகியவைகளும், இவைகளுக்கு மேலாக எங்கு அடியெடுத்து வைத்தாலும் அங்கு தென்படுகிற விருந்தோம்பல் பண்பும், தாங்கள் வெளிநாட்டில் இல்லை, தென்னகத்தில்தான் இருக்கிறோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தத் தவறாது"

## ந்குயென் கோ தாச் (வியட்நாம் தூதர்)

"என்னுடைய நாட்டு பழக்க வழக்கங்களுக்கும் இங்குள்ள பழக்க வழக்கங்களுக்கும் மிகுந்த ஒருமைப்பாடு இ[illegible]தைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். உதாரண[illegible] வெற்றிலையைக் குறிப்பிடுவேன். வெற்றிலை பாக்குடன் தான் உரையாடல் ஆரம்பமாகிறது என்ற வியட்நாம் பழமொழி ஒன்று உண்டு. நெடுங்காலமாக வழங்கிவரும் வியட்நாம் பண்பாடு, வீட்டிற்கு யாராவது விருந்தினர் வந்தால் அவர்களுக்கு முதலில் வெற்றிலைப் பாக்கு வழங்குவோம். திருமண நிச்சய நாளில் வெற்றிலை மாற்றிக் கொள்வது எங்கள் நாட்டில் சம்பிரதாயம்"

## எல்லப் பெர்தி பங்கர் (அமெரிக்க தூதர்)

"கெண்டக்கியனுக்கும் ஒரிகோனியனுக்கும் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு வேறுபாடுகள் பஞ்சாபிக்கும், வங்காள நாட்டுக்காரனுக்கும் உண்டு. இந்தியா வேற்றுமையில் ஒருமைக் காண முயல்கிறது"

# இலக்கியச் சந்தையிலே

# காண்டேகருடன் ஒரு நாள்!

**ஜீ. குருமாணிக்கம், பி.ஏ, டிப் (லிப்)**

பம்பாயிலிருந்து நெடுநேர பிரயாணத்திற்குப் பிறகு செல்வராமனும் நானும் விடியற்காலையில் கோல் காபூர் வந்து சேர்ந்தோம். ஒரு டோங்காவை அமர்த்திக்கொண்டு காண்டேகர் இருப்பிடம் சென்றோம். அவரது வீட்டின் முன் டோங்கா நின்றது. நாங்கள் டோங்காவிலிருந்து இறங்கி வருவதைக் கண்டு வீட்டின் வெளி வாசல் கதவைத் திறந்து எங்களுக்கு ஒருவர் வழி விட்டார்.

நாங்கள் கொண்டுவந்த பெட்டிப் படுக்கைகளை ஒரு மூலையில் வைத்துவிட்டு உட் கூடத்தில் நுழைந்தோம். அங்கு ஒருவர் எங்களுக்கு முகமன் கூறி வரவேற்றார். குசலம் விசாரித்தார். நாங்களும் அவர்தான் காண்டேகர்என்ற தப்புக்கணக்கு போட்டு அவரிடம் அவரையே பார்க்க வந்ததாகக்கூறினோம். அவர் குழப்பமடைந்தார். பிறகு சமாளித்துக் கொண்டு 'இங்கேயே இருங்கள் காண்டேகரை அனுப்புகிறேன்' என்று சொல்லி சென்றார். நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தோம். நான் கூடத்தில் என்னென்ன உள்ளன என்பதையறிய ஒரு கண்ணோட்டம் விட்டேன். விசாலமான கூடம் சுவர்கள் நீல வர்ணத்தால் பூசப்பட்டிருந்தது. அதில் பல படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அதன் நடுநாயகமாக பட உற்பத்தியாளர் "விநாயக்" என்பவர் படம் எடுப்பாக விளங்கியது. வடநாட்டார்களுக்கே உரித்தான திண்டு மெத்தை முதலியன இருந்தன. அதற்குப் பக்கத்தில் காஷ்மீர கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் உமார்கய்யாம் எண்ணத்தில் உதித்த ஓவியம் வரையப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்து இரசித்துத் திரும்பும்போது கூடத்தின் வாயலில் காண்டேகர் வந்து நின்று வணக்கம் கூறினார். நாங்களும் பதிலுக்கு வணக்கம் கூறிவிட்டு பேசத் தொடங்கினோம்.

அவரே முதலில் ஆரம்பித்தார்.

**காண்டேகர் :** தமிழ் நாட்டின் சிறந்த இலக்கிய புத்தகங்கள் யாவை?

**செல்வராமன் :** திருக்குறள், சிலப்பதிகாரம்.

**காண்டேகர் :** பிற மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளனவா?

**மாணிக்கம் :** திருக்குறள் ஆங்கில மொழியிலும், பிரஞ்சு மொழியிலும், மற்ற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

**காண்டேகர் :** தமிழ் நாட்டின் அரசியல் எவ்வாறு உள்ளது?

**செல்வராமன் :** கடந்த தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்றிருக்கிறது.

**காண்டேகர் :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் யார்?

**மாணிக்கம் :** அறிஞர். அண்ணாத்துரை.

**காண்டேகர்** செல்வாக்குப் பெற்ற பெருந் தலைவரென்றும், தலை சிறந்த எழுத்தாளர் என்றும், சிறந்த பேச்சாளர் என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர் தமது பத்திரிக்கையில் என்னுடைய நாவல்கள் குறித்து விமர்சனம் எழுதியுள்ளதாகவும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

**செல்வராமன் :** தங்களுக்கு கோல்காபூர் பூர்வீகமா?

**காண்டேகர் :** அல்ல, கோகன் என்ற இடம். அங்கே ஒரு பள்ளி நிறுவி அதில் ஆசிரியர் தொழில் செய்து வந்தேன்.

**மாணிக்கம் :** தாங்கள் கோல் காபூர் வரக் காரணம்?

**காண்டேகர் :** சினிமா படங்களுக்கு வசனம் எழுதுவதற்கு மாஸ்டர் விநாயக் வேண்டுகோளுக்கிணங்க கோல்காபூர் வந்தேன். இப்பொழுது இதையே நிரந்தர இடமாகக் கொண்டுள்ளேன்.

**செல்வராமன் :** தாங்கள் எழுதிய முதல் நாவல் யாது?

**காண்டேகர் :** "இதயத்தின் குரல்"

**மாணிக்கம் :** இந்த நாவல் ஏன் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படவில்லை?

**காண்டேகர் :** எந்த மொழியிலும் மொழிபெயர்க்க வேண்டாம் என்று கூறிவிட்டேன்.

**செல்வராமன் :** இதுவரை எத்தனை நாவல்கள் எழுதியிருக்கிறீர்கள்?

**காண்டேகர் :** பதின்மூன்று நாவல்கள், நானூறு சிறு கதைகள், நூற்றிபத்து உருவகக் கதைகள் எழுதியுள்ளேன்.

**மாணிக்கம் :** தாங்கள் எழுதிய நாவல்களில் தங்களுக்கு பிடித்தமானது எது?

**காண்டேகர் :** எரி நட்சத்திரம்.

**செல்வராமன் :** தங்களுக்குப் பிடித்தமான நூலாசிரியர்கள்,

**காண்டேகர் :** ஈசாப், ஷேக்ஸ்பியர், இப்சன், பெர்னட்ஷா, தாமஸ் ஹார்டி, துர்கனீவ், ஸ்டீபன்ஸ்விக், செகாவ், மாபஸான், மார்க்ட்வெயின், ஷெல்லி, பைரன், வேட்ஸ்வொர்த், கீட்ஸ், முதலானோர்.

**மாணிக்கம் :** தாங்கள் எத்தனை படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறீர்கள்?

**காண்டேகர் :** பதினைந்து படங்களுக்குமேல் கதை வசனம் எழுதியிருக்கிறேன்.

**செல்வராமன் :** தங்கள் நாவல்களை எத்தனை மொழிகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்?

**காண்டேகர் :** தமிழ், இந்தி, வங்கம், மலையாளம், தெலுங்கு, குஜராத்தி, கன்னடம் முதலிய மொழிகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

**மாணிக்கம் :** எந்த மொழியில் தங்கள் நாவல்கள் அதிகமாக விற்பனை ஆகிறது?

**காண்டேகர் :** முதலாவதாக குஜராத்தி மொழியிலும், இரண்டாவதாக தமிழ் மொழியிலும் அதிகமாக விற்பனை ஆகிறது.

**செல்வராமன் :** காந்தியை தாங்கள் சந்தித்து இருக்கிறீர்களா?

**காண்டேகர் :** ஒரே ஒரு தடவை பம்பாயில் என் மாமாவுடன் சென்று சந்தித்து பேசியிருக்கிறேன்.

**மாணிக்கம் :** விநோபாவைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

**காண்டேகர் :** மிக நல்லவர், பூமிதான இயக்கத்தைப்பற்றி ஒரு நாவல் எழுதுமாறு கேட்டிருக்கிறார்.

பகல் உணவு சாப்பிட்டு ஒரு நாள் முழுதும் அவருடன் இருந்து, விடைபெற்றுக் கொண்டுதமிழ்நாடுகிளம்பினோம் நாங்கள் முதலில் காண்டேகர் என்று தவறாகக் கருதிய அந்த "ஒருவர்" எங்கள் முன்னால் வரவேயில்லை, நாங்கள் மீண்டும் சந்திக்கவேயில்லை.

## டிட்டோ

இரண்டாவது உலக யுத்தத்தின் போது 'டிட்டோ' என்பது மர்மமான ஓர் சொல்லாக இருந்தது. நியூயார்க் டைம்ஸ் டிட்டோ என்பது பெண்மணி என வரைந்தது. சில மிதவாதிகள் பயங்கர இயக்கத்தின் பெயர் என எண்ணினர். சிலர் யுகோஸ்லேவியாவில் பாரசூட் மூலம் குதித்த ரஷ்ய தளகர்த்தர் எனக் கருதினர். உண்மையில் டிட்டோ என்பது ஜோசிப் பிராஸ் என்பவரின் புனைப் பெயர்களில் ஒன்றாகும். டிட்டோ பிறக்கும்போது யுகோஸ்லேவியா என்றோர் நாடு இல்லை. ஆஸ்திரிய ஹங்கேரி சாம்ராஜ்யமே இருந்தது.

# வேலைக்கார அழகி..!

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வதையைப்பற்றி சிங்கின் மனைவி அவரிடம் புகார் செய்தாள். பசியோடும் களைப்போடும் வந்த சிங் ஆத்திரமடைந்தார். பிலாசியாவை அழைத்து முரட்டுத்தனமாக அடித்தார்!

பிறகு சிறிது நேரத்தில் விருந்தொன்றுக்கு வெளியில் சென்றுவிட்டார் சிங். நள்ளிரவில் திரும்பி வந்தபோது பயங்கரமான செய்தி காத்திருந்தது. அவர் அடித்த அடியினால் பிலாசியா இறந்துவிட்டாள் என்பதுதான் அது!

அன்றிரவே சிங், தனது மனைவியோடும் வேலையாளோடும் பிலாசியாவின் பிணத்தை எடுத்துக்கொண்டு 60மைலுக்கு அப்பாலிருந்த குலாரியா என்ற இடத்துக்கு காரில்பயணமானார். அங்கே அவருடைய உறவினரான பன்வார் சிங் இருந்தார்.

குலாரியாவை அடைவதற்கு இரண்டு மைல் தொலைவிலேயே கார் கோளாருல் நின்று விட்டது. அப்போது அந்த வழியாக ஒரு மாட்டு வண்டி வந்தது. சிங்கும் மற்றவர்களும் அந்த வண்டியில் குலாரியா சென்றனர். நடு வழியில் பழுதான கார் — அதனுள்ளே ஒரு பெண்ணின் பிணம்!

குலாரியாவில் எல்லோரும் கலந்தாலோசித்தனர். முடிவில் நான்கு பணியாட்கள் காரிருந்த இடத்துக்கு வந்தனர். அவர்கள் பிலாசியாவின் பிணத்தை பக்கத்திலிருந்த காட்டுக்குள் எடுத்துச் சென்றனர். பிணத்தின் சதைப் பகுதி துண்டு துண்டாக்கப்பட்டு கழுகுகளுக்கும் நரிகளுக்கும் போடப்பட்டது! எலும்புகள் காடெங்கும் இறைக்கப்பட்டன!

இறுதியாக அரசாங்க வழக்கறிஞர் ஜூரர்களுக்கு கூறினர்— சட்டம் மனிதனுக்கும் மனிதனுக்கும் வேறுபாடு காட்டுவதில்லை. "சட்டம் ஒருமனிதனின்செயலைப் பற்றித்தான் கருதுகிறதே தவிர, அவன் தகுதியையோ அல்லது சமூகத்திலுள்ள அந்தஸ்தையோ கவனிப்பதில்லை. எனவே குற்றவாளியின் பெயருக்கு முன்னும் பின்னுமுள்ள தகுதியையும் அதிகாரத்தையும் மறந்துவிட்டு சாதாரண மனிதனுகவே நடத்த வேண்டும்."

அரசாங்க வழக்கறிஞர் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கக்கூடும்? இந்த கேள்வியின் பதிலில் சிங்கின் எதிர்காலம் அடங்கி இருந்தது.

பிலாசியாவின் உடலை சிதைத்ததாகக் கூறப்பட்ட நான்கு பணியாட்களும் விசாரிக்கப்பட்டனர். மாட்டு வண்டியில் சென்ற கிராமவாசிகள் விசாரிக்கப் பட்டனர். பிலாசியாவின் எலும்புத்துண்டுகளென்று சில சாட்சிப் பொருட்களாகக் காட்டப்பட்டன! சிங் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு உணர்ச்சியற்ற முகத்தோடு நின்று கொண்டிருந்தார்,

சர்க்கார் தரப்பு சாட்சியங்கள் முடிந்த பின்னர், குற்றவாளிகள் தங்கள் நிலையை விளக்கினர். பிலாசியாவின் நடத்தையினால் ஆத்திரங்கொண்டு அவளை லேசாக அடித்ததாகவும், பன்வார் சிங்கின் வீட்டில் வேலை பார்த்துவந்த பிலாசியாவின் உறவினரான பாசந்தி என்பவனிடம் அவளை ஒப்படைக்கவே காரில் அழைத்துச் சென்றதாகவும், அவளை அங்கே விட்டுவிட்டு தான் மட்டும் திரும்பியதாகவும், பிறகு அவள் என்ன ஆனாள் என்பது தனக்குத் தெரியாதென்றும் சிங் கூறினர்.

சிங்குக்கு வாதிட்ட வழக்கறிஞர் திறமையோடு வாதிட்டார். கொலைக்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஆனால் பிலாசியாவைக் கொல்ல வேண்டிய நோக்கம் சிங்குக்கு இல்லை; இருந்ததாகவும் நிரூபிக்கப்படவில்லை. சாக வேண்டிய அளவிற்கு பிலாசியாவை அடித்ததாக எந்த சாட்சியும் கூறவில்லை. பிலாசியாவின் பிணத்தைக் கண்டவர் எவருமில்லை. சாட்சிப் பொருளாக காட்டப்பட்ட எலும்புத் துண்டுகள் பிலாசியாவின் எலும்புத் துண்டுகள் என்பதற்கு எந்தவிதமான சாட்சியங்களுமில்லை. எல்லாவற்றையும் கருதும்போது பிலாசியாவின் மரணம் நிரூபிக்கப்படவில்லை என்றுர் சிங்குக்கு வாதிட்ட வழக்கறிஞர்.

தீர்ப்பளிக்க வேண்டிய கட்டம் நெருங்கியது. ஜூரர்கள் தங்களுக்குள் விவாதிக்க தனி அறைக்குள் சென்றனர்.

ஒரு மணி நேரம் சென்றது, ஆனால் ஒரு யுகம் கழிந்தது போலாயிற்று. வெளியில் நீதி மன்றத்தில் கூடியிருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயம் தெரிவித்தனர்!

கடைசியில் ஜூரர்கள் வெளியில் வந்தனர். குற்றவாளிகள் அனைவரும் நிரபராதிகள் என்று தீர்ப்பளித்தனர். ஆனால் நீதிபதி சிங்கை நிரபராதி என்று ஒப்புக்கொள்ளவில்லை!

நீதிபதி தனது தீர்ப்பில் பிலாசியாவை அடித்ததாகக் கூறப்படும் சம்பவம் பற்றி விரிவாக ஆராய்ந்தார். ஆனால் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்தார். இச் சம்பவம் பற்றி நீதிபதி குழம்பிவிட்டார் என்பதை தீர்ப்பின் வாசகங்கள் காட்டுகின்றன.

சிங்குக்கு ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஐ. சி. எஸ், அதிகாரியாக இருந்துவந்த பி. பி. சிங் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

இனி வரும் ஆறு ஆண்டுகளுக்கு அதுதான் அவர் உலகம்.

செய்தித்தாள்கள் நாடெங்கும் இச் செய்தியை எடுத்துச் சென்றன. 'ராய்ட்டர்' உலகெங்கும் எடுத்துச் சென்றது.

ஆனால் வழக்கு இத்துடன் முடிந்துவிடவில்லை. சிங் உயர் நீதி மன்றத்துக்கு அப்பீல்செய்து கொண்டார். மறைந்த பகதூர் சாப்ரு, சிங்குக்காக வாதாடினர். உயர் நீதி மன்ற நீதிபதிகள் குற்றத்தை உறுதிப்படுத்திவிட்டு தண்டனையை மட்டும் நான்கு மாதங்களாக குறைத்தனர்.

இந்தத் தீர்ப்பு வந்தபோது சிங் நான்கு மாதங்களை சிறையில் கழித்துவிட்டார். அதனால் விடுதலை செய்யப்பட்டார். ஆனாலும் அவர் மீது விழுந்த களங்கம் கழுவப்படவில்லை! கொலைகாரன் என்ற மாசு நீங்கவில்லை! இதைப் போக்கிக் கொள்ள பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொண்டார். புகழ் பெற்ற வழக்கறிஞரான பிரிட் வாதாடினர்.

சிங் குற்றவாளி அல்ல என்று இங்கிலாந்தில் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்!

இந்த நல்லசெய்தியைக் கேட்க சிங்கின் மனைவி அப்போது உயிருடனில்லை! இங்கிலாந்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே பரிதாபமான சூழ்நிலையில் அவள் இறந்து போனுள்.

இரண்டரை ஆண்டு கால வழக்குக்கும் தொல்லைகளுக்கும் பிறகு, நான்கு மாத கால சிறை வாழ்வுக்கும் மனைவியின் மரணத்திற்கும் பிறகு, மன வேதனைக்கும் அவமானத்துக்கும் பிறகு 'கொலைகாரன்' என்ற களங்கம் கழுவப்பட்டது! பழைய படி ஐ. சி. எஸ். அதிகாரியாக உத்தியோகம் தரப்பட்டது! ஆனால் மீண்டும் கிடைத்த இந்த வாழ்க்கையின் தன்மை தான் என்ன?

நிரபராதி என்ற தீர்ப்பையும் பெருமை மிக்க உத்தியோகத்தையும் அனுபவிக்க முடியாதபடி துன்பக் கோப்பை நிரம்பி வழிந்தது! வழக்கு நடைபெற்ற போதும், சிறையில் வாழ்ந்த போதும், கொலைகாரன் என்று இகழப்பட்ட போதும் வாழ்வே மாறிவிட்டது. பழைய சிங் அல்ல இப்போது! பழைய நாட்களின் கீர்த்தியும் புகழும் கனவாகி விட்டன! சகிக்க முடியாத ஒரு சூன்னியமே இப்போது வாழ்வில் மிஞ்சி யிருந்தது! வாழ்க்கை அதன் நோக்கத்தை இழந்து விட்டது! உயிர் வாழ்வது ஒரு சுமையாகத்தான் ஆகிவிட்டது! அணைத்து அன்போடு ஆறுதல் கூற இருந்த மனைவியும் இறப்புலகுக்கு ஏகிவிட்டாள்!

நிரபராதி என்று தீர்ப்பு கிடைத்து, பதவிஏற்று ஓராண்டு காலமே உயிர் வாழ்ந்தார் பிரிஜ் பூஷன் சிங். பிறகு ஒரு நாள் துப்பாக்கியால்தற்கொலைசெய்து கொண்டார். வாழ்வில் இழந்ததை மரணத்தில் பெற நினைத்தாரோ என்னவோ!

இத்தனை அழிவுகளுக்கும் காரணமாயிருந்த அந்த அழகு மிக்க வேலைக்காரியை உயிருடனே அல்லது அவள் பிணத்தையோ அதற்கு பிறகு எவருமே பார்க்கவில்லை!

★

## களை தொடுக்கும் காங்கிரஸ் ஏடுகள்

★

"நாகபுரி மாநாட்டின் தீர்மானங்கள் அத்தனையும் உபயோகமற்றவை. யார் கூடாது என்று கண்டித்தார்களோ அந்த தனியார் துறையினரிடமிருந்தே நாகபுரி மாநாட்டிற்கு வேண்டிய பெரும் பொருளைப் பெற்றது விசித்திரமாக உள்ளது. காங்கிரஸ் தனது செல்வாக்கைப் படிப்படியாக இழந்து கொண்டு வருகிறது. கட்சிக் காரியங்களுக்கு பணக்காரர்களின் பண உதவியைப் பெறுவதில் தாராளமாய் இருந்துவிட்டு, அவர்களை குஷ்டரோகியைப் போல் நடத்துவதில் காங்கிரசும் அதன் தலைவர்களும் எந்த முரண்பாட்டையும் காண முடியவில்லையா என்பது நமக்குத் தெரியவில்லை.

— இந்தியன் எக்ஸ்பிரஸ்

அபயங்கர் மாநாட்டுத் தீர்மானங்கள் அத்தனையும் அரை வேக்காடு ஊமை கிழங்காகும். பரம்பரையாக நாம் செய்து வந்த பயிர்த் தொழில் முறையை மாற்ற முயல்வது அவ்வளவு உகந்ததல்ல,

— ப்ரீபிரஸ் ஜர்னல்

கூட்டுறவு முறையிலிருந்து கம்யூனுக்கும் கம்யூன்களிலிருந்து கமிஷார்களுக்கும் நெடுந் தூரம் இல்லை.

— பயனீர்

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர், பலர் அபயங்கர் நகர் திருவிழாவிற்கு பணம் கொடுத்துள்ளனர். 'பக்கா திருடர் இருவர் கையில் ஒரு அப்பாவி அகப்பட்டானும். ஒரு ரூபாய் கொடு என்று சொன்னர்கள், கொடுக்கப்பட்டது. ஏன் ஒரு ரூபாய் கேட்கிறீர்கள் என வினவியதற்கு உன் கடிகாரத்தையும், துணிமணியையும் யார் பெறுவது என்பதற்காகப் பூவா தலையா பார்த்துக்கொண்டுள்ளோம்' என்றுசொன்னர்களாம். அத்தகைய நிலையில் இருப்பதை எப்படி சகிப்பது.

— சுயராஜ்யா

## அபயங்கர் நகர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னாட்டுத் தலைவர்களுக்கு புதிய அந்தஸ்து போன்ற பாவனைக் காட்டப்படுவது, ஊர் இரண்டுபட்டதால் கூத்தாடிக்கு வந்த தற்காலிக வாழ்வு என்றுக் கூறப்படுவதை நாம் முழுவதும் புறக்கணித்து விடுவதற்கில்லை.

காங்கிரசுக்கு அடுத்த தலைவர் யார்? என்ற பிரச்சினை வந்தபோது, தென்னாட்டைச் சேர்ந்த நம்மவர்களாகிய திரு. சி. சுப்ரமணியம், திரு. நிஜலிங்கப்பா ஆகியவர்கள் பெயர்கள், வதந்திகளில் உலவியது குறித்து நாம் பெருமைப் பட்டாலும் குறிப்பிடப்பட்ட எந்த தலைவருக்கும் நாலு மாநிலத்தில்கூட செல்வாக்கு கிடையாது என்ற பேருண்மை, காங்கிரஸ் கூறும் ஏக இந்தியா-பாரத்வர்ஷம் எத்தகைய மணல்வீடு என்பதை காட்டுவதற்குச் சிறந்த உதாரணமாகும்.

'நேருவிற்குப் பிறகு'? என்ற கேள்விக்கு அபயங்கர் மாநாடு தக்க பதிலளித்ததற்காக திராவிடர்கள் ஒருவகையில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள். சல்லடைப் போட்டு சலித்தாலும் ஒரு தலைவரைப் பெற முடியாத கட்சி, எப்படி இந்த உபகண்டத்தை-விடுதலைத் தீ பற்றி எரிகின்ற நமது நாட்களில் கட்டிக் காத்து ஆளப் போகிறது என்ற சந்தேகத்தை வலுக்கச் செய்துள்ளது.

காங்கிரஸ் தலைமையின் பஞ்சம், நேருவின் அருமந்த புதல்வி இந்திரா காந்தியை அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்று மேலிடம் உறுதியாகக் கருதுகிறது என்ற செய்தியிலிருந்து உலகுக்கு அறிவிக்கப்படுகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

யார் அடுத்த காங்கிரஸ் தலைவராக வர வேண்டும் என்பதில் நமக்கு அக்கரையும் இல்லை—அவசியமும் இல்லை. ஆனால் காங்கிரஸ் ஜனநாயகத்தை எப்படி தனிப்பட்ட நபர்களின் காலடியில் காணிக்கைப் பொருளாக்கிவிட்டது என்பதற்கு இதைவிட வேறு சம்பவங்கள் தேவையில்லை என்று கருதுகிறோம்.

இந்திரா நேருவுக்கு தலைமை தாங்க வேண்டிய ஆற்றல் இல்லை என்றோ, அந்த பீடத்தை அலங்கரிக்கக் கூடாதென்றோ நாம் சொல்ல வரவில்லை. ஒரு வேளை இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டால் நேரு குடும்பத்தில் மூன்று தலைமுறையினர் அந்த பீடத்தை அலங்கரித்தனர் என்று ஆனந்த பவன வாசிகள் பெருமைப் படக்கூடும். அதுபற்றி நமக்குக் கவலையில்லை.

இந்திய உபகண்டத்தை ஆளும் பெரும் வாய்ப்புப் பெற்ற ஒரு கட்சியின் தலைமைப் பதவி நேருவின் பணிப் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டால், ஏற்கெனவே கோமாளிக் கூத்தாக்கப்பட்டிருக்கும் ஜனநாயகம் இன்னும் எவ்வளவு கேவலமாக மாறும் என்பது குறித்தே வருந்துகிறோம்.

காங்கிரஸ் என்பது நேருவின் குடும்ப விவகாரம் என்ற குறுகிய எல்லைக்குள் அடைத்துவிடப் போகிறார்களா என்பது சில காலத்திற்குள் நாடு தெரிந்து கொள்ள இருக்கிறது. காங்கிரஸ் பொதுச் செயலாளர் இந்திரா காந்தியின் தலைமையை ஆதரித்து கூறியுள்ள வார்த்தைகள் நமது சிந்தனையைக் கிளறுகிறது. காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் 'இளம் இரத்தத்'தைப் புகுத்துவதற்கும், வலது சாரி ஆதிக்கம் வலுப் பெறாமல் இருப்பதற்கும் இந்திராவின் தலைமை உதவி புரியும் என்று சிபாரிசு செய்துள்ளார். ஒன்றே ஒன்று கூறுவோம். பொதுச் செயலாளரின்பாராட்டுரை இந்திரா நேருவுக்குக்கிடைத்த நல்ல புகழ் மாலை என்றாலும், "இளம் இரத்தத்திற்கும்" முற்போக்குக் கருத்துக்கும் காங்கிரஸ் நேரு அவர்களின் வீட்டுத் தாழ்வாரத்தில்தான் ஒதுங்க வேண்டியுள்ளதே என்பதற்காகப் பரிதாபப் படுகிறோம்.

★

## சினிமா இல்லா நாடு!




**பரப்பு - 2,70 ஆயிரம் மைல்**

**மக்கள் - 1 கோடி 25 லட்சம்.**

**தலை நகரம் - காபூல்.**

**மொழி - பாரசீகம், புஸ்து.**

முகம்மதிய நாடு. பாலைவனமும் சோலையும் நிறைந்த நாடு. முடியரசு கொண்ட நாடு. மக்கள் பிரதிநிதிசபையும் உண்டு. முகமதிய ஷரியத் சட்டம் அமுலில் உள்ளது. ஏழு மாவட்டங்களாக நாடு பிரிக்கப்பட்டிருக்கிறது. பல பெரிய போர்வீரர்கள் இதன் வழியாக சென்று பல சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள், அலெக்ஸாந்தர், தைமூர், ஜங்கிஸ்கான் முதலியோர் இந்நாட்டை அடிமைப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆப்கானியர் வாழ்க்கையே விநோதமானது. நல்ல உயரமும் பருத்த சரீரமும் உள்ளவர்கள். எப்பொழுதும் தொப்பி அணிந்திருப்பர். விருந்தினரை உபசரிப்பதில் அவர்களுக்கு ஈடு இலர். நாட்டியம் ஆடுவது, பாட்டு பாடுவது அவர்களுக்கு பொழுதுபோக்காகும். அமெரிக்க மைஸ், மேலேன் முதலிய பொருள்களைப் பயிரிடுகிறார்கள். இரவுக் காலத்தை தேநீர் விடுதிகளில் கழிக்கிறார்கள். பிரயாணிகளை வரவேற்று உபசரிப்பதை பெரிய பெயராக கருதுகிறார்கள். பெண்களை வெளியில் அழைத்துவருவதில்லை. பதின்மூன்று வயது தாண்டியவுடன் 'கோஷா' முறையை பின்பற்றுகிறார்கள். மருத்துவர், டாக்டர்கள் கூட பெண்களை பார்க்கக்கூடாது. கணவன் இன்ன வியாதி என்று கூறி மருந்து வாங்கிச் செல்வான். இதை இன்றும் பின்பற்றி வருகிறார்கள்.

குவாலா பிஸ்து என்ற இடம் பழையகால தலைநகரமாகும். இன்று சீரழிந்துகிடக்கிறது. அதனுடைய சுவர் 9 மைல் நீளமிருக்கிறது. இந்த இடம் தென்பகுதியில் உள்ளது. இங்குதான் ஹல்மாண்டு என்ற நதி ஓடுகிறது. இது பாலைவனம் நிறைந்த இடம். வெயிலின் கொடுமையாலும் வெள்ளப்பெருக்கினாலும் மக்கள் இறக்கிறார்கள். இந்நாட்டின் புதிய தலைநகரம் காபூல். இது பூ வடிவில் இருக்கிறது. இங்கு பல உயரமான கட்டிடங்கள் உள்ளன. இருந்தும் சினிமா தியேட்டர், ஹோட்டல்கள் கிடையா. சரியான செப்பனிட்ட பாதைகள் கிடையாது. ரயில்வேக்கள் கிடையாது. ஜெர்மானியர்களை பெரிதும் விரும்புகின்றனர். அமெரிக்காவும் ருஷியாவும் பண உதவி செய்து நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டு வருகிறார்கள். மக்கள் பெரும்பாலும் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். கைபர் கணவாய் வழி இங்குதான் உள்ளது. குசிஸ் என்ற நாடோடி மக்கள் வசந்த காலத்தில் இங்கு வந்து தங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

காபூல் ஆப்கானிஸ்தானின் தலைநகரம். இங்கு மண் சுவரினால் கட்டப்பட்ட கட்டிடங்களைப் பார்க்கலாம். குறுகலான பாதைகள் உள்ளன. இங்கு அடிக்கடி பூகம்பம் ஏற்படுகிறது. அதனால் அழகான கட்டிடங்கள் காணப்படுவதில்லை, மக்கள் பெரும்பாலும் கூடாரம் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். குளிர் காலத்தில் கம்பளி ஆடையையும் கோடை காலத்தில் பருத்தி ஆடையையும் அணிகிறார்கள். இங்கு அமீரின் மாளிகையும், பாபரின் சமாதியும் உள்ளன.

காந்தகார் மற்றொரு முக்கிய நகரம். ஹல்மாண்ட் நதிக்கு அருகில் அமைந்துள்ளது. நாதர்ஷா இந்த நகரத்தை கட்டியதாக கூறுகிறார்கள். இங்கு பெரிய சந்தை கூடுமிடமிருக்கிறது. இச்சந்தையில் மாஞ்செஸ்டர் பருத்தியும், ஷபீல்ட் கத்தியும், பாரசீகத்து கம்பளமும் விற்பனைக்கு வருகின்றன. இங்கு அகம்மது ஷாவின் சமாதி உள்ளது.

1928-இல் அமானுல்லா ஐரோப்பிய சுற்றுப் பயணம் சென்றார். இதன் விளைவாய் துருக்கியின் சீர்திருத்தச் சிங்கம் கமாலின் வழி வகைகளைப் பின்பற்றி அமுல் நடத்த முயன்றார். கோஷாவை ஒழிப்பது, இருதார மண எதிர்ப்பு, ஐரோப்பிய உடை உடுத்தல் ஆகியவை அவர் புகுத்த விரும்பிய சீர்திருத்தங்களாகும். முல்லாக்களின் கடுங்கோபத்திற்களானார். கடைசியாக நாடு கடத்தப்பட்டார்.

இந்த பாலைவன நாடு சுதந்திர நாடு - விடுதலைபுரி!

**நாம் வாழ விரும்பும் திராவிட நாடு பரப்பு 244,454 சதுர மைல்.**

**மக்கள் - 9 கோடி பேர்.**

**திராவிடமே! நீ தனி நாடாவது எப்போது?**

**எங்கள் தாகம் தணிவது எப்போது?**



# கொட்டறை எண். 9

1951–ஆம் ஆண்டு மேற்கு ஆப்பிரிக்கா காலனிப் பகுதியான கோல்ட் கோஸ்ட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் டவுன் சிறைச் சாலையில் உயரமான திடகாத்திரமுள்ள ஒருவர் கொட்டறை எண் 9–ல் மீன் வலையை பின்னிக்கொண்டிருந்தார். சலிப்பான வேலைதான். ஆனால் ஒன்றுமே செய்யாமல் இருப்பதைவிட உபயோகமான பொழுது போக்காகத் தெரிந்தது அந்த மனிதருக்கு. 'கோல்ட் கோஸ்ட்' என்றுஅழைக்கப்படும் சுவர்ணபுரியில் தொழிலாளர் மத்தியில் ஓர் வேலை நிறுத்தத்தைத் தூண்டியதற்கே அவர் காராக்கிரகத்தில் அடைக்கப்பட்டிருந்தார்.

செல்வாக்கு மிக்க அரசியல் கட்சியின் தலைவனை சிறைக்குள் அடைத்து வைத்திருந்ததினால் நடைபெற இருந்த தேர்தலை சுலபமாக சமாளிக்கலாம் என்று கருதியது அதிகார வர்க்கம்.

ஆனல் தேர்தலின் முடிவு அந்த கைதியின் கரத்தை வலுப்படுத்துவதாக அமைந்தது. அந்த கைதி வேறு யாருமில்லை. அண்மையில் இந்தியா வந்து சென்ற கானு நாட்டுத் தலைவர் நிக்ருமாதான்! எங்ருமா என்று கானுவில் அவரை அன்புடன் அழைக்கின்றனர். 80 சதவிகித வாக்குகள் நிக்ருமா கட்சிக்குக் கிடைத்தது, ஆதிக்க வெறியர் அவரை விடுதலை செய்து கானு நாட்டின் அரசியல் தலைமையை ஏற்க வேண்டினர்.

நிக்ருமா நேராக கொட்டறை எண் 9–ல் இருந்து கைதி தொப்பியுடன் அக்ரா நகரம் சென்று பதவி யேற்ருர். இதிலே பெரிய விசித்திரம் என்ன என்ருல் அவரை கைதியாக வைத்திருந்த ஜேம்ஸ் டவுன் சிறை அதிகாரி தனது உத்தியோகத்தை ராஜினுமா செய்தார்.

1957–ல் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது கானு. நிக்ருமா ஆப்பிரிக்கா தேசிய உணர்வின் சின்னமாக விளங்குகிருர். பென்சில் வேனியா பல் கலைக் கழகத்தில் பயின்ருர். சில ஆண்டுகள் லண்டனிலும் இருந்தார். மாணவர் தலைவராக இருக்கும்போது அவரது ஆற்றலைக் கண்ட கோல்ட் கோஸ்ட் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பதவியை அளித்தது நாட்டில் காலடி எடுத்து வைத்ததும் அன்பிற்குரிய தலைவரானுர். சென்ற சில நாட்களுக்கு முன்பு டெல்லியில் பேசும் போது "ஆப்பிரிக்காவின் பல்வேறு பகுதிகள் விடுதலை பெருதவரை ஒரு சிறு நிலப்பரப்பின் விடுதலை சுதந்திரமாகாது என்று எண்ணும் காலம் வந்து விட்டது" என்று கூறியது சிந்தனைக் [illegible]ரியது. மற்றுமோர் சுவையான சேதி நம் அறிஞர் அண்ணு அவர்களை சென்ற ஆண்டு சைதாப் பேட்டை சிறையில் அடைத்து வைத்திருந்த கொட்டறை எண்ணும் 9 தான். அதே கொட்டறை எண் 9–ல் தான் முதன் முதல் அறிஞர் அண்ணு இந்தியைஎதிர்த்து சிறைப்பட்டபோது பூட்டப்பட்டார். கொட்டறை எண் 9–க்குள்ள விசேஷ[illegible] சுவர்ணபுரியில் தெரிந்து விட்டது. நமக்கு காலம்தான் அறிவிக்க வேண்டும்.

## அண்ணுவுடன்...!

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

நமது நாட்டின் தலைவர்கள் இவ்வளவு கோலாகலமாக இருப்பது தி. மு. க. வுக்குப் பிடிக்குமோ என்றுதான் நமது காங்கிரஸ் நண்பர்கள் கருதுவார்கள். இதையெல்லாம் கண்டதும் எந்தத் தி. மு. க. வின் உள்ளத்திலும் பொருமைக் கனல் வீசாது. ஆனல், அவன் உள்ளத்தில் புது எண்ணங்கள் மட்டும் மலராமல் இருக்காது. ஏன் அப்படி எண்ணங்கள் மலரும் என்ருல் அவன் அடிக்கடி காங்கிரசு நண்பர்கள் கூறிவந்த வாசகங்களைக் கேட்டிருக்கின்ருன். கிராமங்களுக்குப்போ, ஏழ்மையான வாழ்வை நடத்து, ஏழ்மை இந்தியா வறுமையில் வாடும் பாரதம், பரங்கியர் செய்யும் ஊதாரிச் செலவுகள். இப்படிப்பட்டத் தலைப்புக்களையே பல ஆண்டுகள் கண்டு, கண்டு கருத்துக்கள் பல பெற்றவனுயிற்றே, அவன் எப்படி எதையும் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியும்.

இடிந்த வீடுகள், கூரையில்லாக் குடிசைகள், கந்தையில்லா மனிதன், வறுமையால் உயிர் விடும் தோழன், இதையும் பார்த்துக்கொண்டு, மறுபுறம் அசோகா ஓட்டல், மந்திரிகளின் ஊதாரிச் செலவினங்கள், இவைகளையும் பார்க்கும் எவரின் மனமும் எண்ணங்களை தூண்டி விடத்தானே செய்யும்.

இவற்றையெல்லாம் எண்ணும்போதுயாருக்குச்சுதந்திரம்? என்று கேட்கத்தானே தோன்றுகிறது. இதையெல்லாம் விட ஆச்சரியமானது 'அசோகா ஓட்டலில்' சர்வர்களில் பலபேர் தென்னகத்துக்காரர்கள். அதை பார்த்தபோது எனக்குத் திகைப்பே வுந்து விட்டது. அடிப்படையில் இருந்து மேலேயுள்ள மந்திரிகள் வரையில் நம் நாட்டுக்காரர்கள் வடநாட்டுக்கு வேலைக்காரர்களாகவே போய்விட்டார்களே என்றுதான் எண்ணத் தோன்றிற்று.

இப்படி என் எண்ணங்களை ஓட்டிக் கொண்டிருக்கும்போது அண்ணு அவர்கள் அது அசோகனுயிருந்தாலும் சரி, அல்லது அதற்கு மேற்பட்டவனுயிருந்தாலும் சரி, அதில் நம்மவன் தான் வேலைக்காரன் என்று கூறினுர்கள். அது நகைச் சுவைக்காக அவர்கள் கூறியது என்று எனக்குப் படவில்லை. சென்னையிலிருந்து 1354 மைல்களுக்கு அப்பாலும் அவர் இதயத்தில் நம்மவரைப்பற்றி எவ்வளவு பாரம் இருக்கிறது. அந்த வேதனை வெடித்[illegible] சொல்லாக உதிர்ந்தது என்றே எனக்குப் பட்டது.

★

## "தென்னகம்" செழும் வண்ணத் தமிழேடு

-: புதுப்பட்டி. க. முத்துசாமி :-

★

"தென்னகம்" செழும் வண்ணத் தமிழேடு,
கன்னித் தமிழரின் கலங்கரை விளக்காடும்
எண்ணம் எழுத்தாகி எழுச்சியை யூட்டி,
இறவா மற[illegible]தை எடுத்தூட்டும் புத்தேடு.

பொன்னன கருத்துதனை புதுமெருகேற்றிப்,
புத்த முதாக்கி பொழியும் தமிழேடு.
தன்னலக் காரரின் தலைகன மிறக்கித்,
தாய்நாட்டின் தரம்காக்கும் தங்கத் தனியேடு.

எண்ணி லடங்காத இலக்கியப் பூக்காடு,
இயலிசை, நாடக மேந்திவரும் தேன்கூடு,
இன்னல் எதுவரினு மெதிர்த்துப் போரிட்டு,
இளைஞர் இதயத்தை இளக்கிடு மினவேடு.

கண்கொண்டு கலையேந்தும், கடமைபல தூண்டும்,
கல்மனம் படைத்தோரை கனிவாக்கும் பண்புண்டு,
மாண்புண்டு, மறத்தமிழன் வளமை யெல்லாமுண்டு,
வற்ரு நதியாகி வழங்கும் தமிழ்த்தொண்டு.

கன்னல் மொழியேந்தி கற்ருேரி னறிவூன்றி
வெண்ணில வொளியாக வீசும் பொன்னேடு,
அன்னிய யிழிமொழியை அறவே தகர்த்தெறிந்து,
அறியாமை யிருளகற்றும் அழிவில்லா கடலேடு.


யானைசிங்கம்சுருட்டுகள்

TRADE MARK



T.V.முத்துகிருஷ்ணன்
திருச்சி-2


ஆசாயரும், வெளியிடுபவரும், கே. ஏ. மதியழகன, பி.எ., அச்சிடுபவர், கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஓர்க்ஸ். 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.